05.03.2021
OS.No.205/2018

வா. சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | -- | பட்டா எண்.57 கணிணி நகல்(2 எண்ணிக்கை) | வாசாஆ.4. |
| 2. | -- | வருமானவரி கணக்கு நகல் | வாசாஆ.5. |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதி என்னிடம் ரூ.10 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதை திருப்பி தரவில்லை என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ரூ.10 லட்சம் வரை கடன் கொடுக்கும் அளவுக்கு வசதி உள்ளது என்பதை காட்ட வாதசாஆ.5 வருமானவரி சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதசாஆ.5 2014-2015ம் ஆண்டுக்கானது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் 1.5.2017ம் தேதி கடன் வாங்கினார். 1.5.2017ம் தேதி ரூ.10 லட்சம் வைத்திருந்தேன் என்பதை காட்ட 2017ம் வருடத்திய வருமான வரி சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017ம் வருடத்திய வருமான வரி சான்றிதழ் என்னிடம் இல்லை என்றால் வரி செலுத்தும் அளவுக்கு வியாபாரம் இல்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை. 2014-2015க்கு பிறகு வருமானவரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரி செலுத்தும் அளவுக்கு வருமானம் இல்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை. 2014-15 வருமான வரி கணக்கில் சொல்லப்பட்ட காண்ட்ராக்ட் இன்கம் என்று சொல்லப்பட்டுள்ளது. அதில் என்ன வகையான காண்ட்ராக்ட் இன்கம் என்று போடப்பட்டுள்ளதா என்றால் ஆடிட்டரைத்தான் கேட்கவேண்டும். வருமான வரி வணக்கில் கண்டுள்ளதால் என்றால் இல்லை. 15 வருடமாக மாந்தோப்பு காண்ட்ராக்ட் எடுத்து செய்கிறேன். யார் பெயரில் மாந்தோப்பு காண்ட்ராக்ட் எடுத்து செய்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாந்தோப்பு காண்ட்ராக்ட் எடுத்து செய்த பத்திரம் முழுவதும் ஆடிட்டர் வசம் உள்ளது. காண்ட்ராக்ட் வருமானம்

ரூ.3,49,910 என்று மட்டுமே வாதசாஆ.5 ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ.5 ல் விவசாய வருமானம் ரூ.1,20,000/- என்று காட்டப்பட்டு உள்ளது என்றால் சரிதான். வாதசாஆ.4 ல் 2 ஏக்கர் 54 செண்ட் நிலம் புஞ்சை நிலம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். புஞ்சை நிலத்தில் 300 தென்னை மரங்கள் வைத்து அனுபவித்து வந்தேன் என்று காட்ட அடங்கல் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி பேரில் உள்ள பட்டாவில் கண்ட நிலங்கள் புஞ்சை நிலங்கள் என்றால் சரிதான். மாந்தோப்பு உள்ளது. அதில் மாந்தோப்பு உள்ளதாக கண்டுள்ளதா என்றால் இல்லை. புஞ்சைக்கும் நஞ்சைக்கும் வித்தியாசம் தெரியும். வறட்சியை தாங்கி விளையும் நிலம் புஞ்சை நிலமாகும். புஞ்சை நிலத்தில் போர், மோட்டார் உள்ளது என்றும் யார் பேரில் மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த போது என் மனைவி பேரில் இருந்த நிலங்களில் இருந்து வந்த வருமானம் மற்றும் என் பேரில் இருந்து வந்த சொத்தின் வருமானத்தில் இருந்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டா, வருமானவரி சான்று ஆகியவை 2017 ல் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் என் வசம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் தாவா தாக்கல் செய்த காலத்தில் என் கைவசம் இருந்தும் மேற்படி ஆவணம் பற்றி எந்த விவரமும் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் சம்மந்தமாக என் கைவசம் இருந்தும் நான் பிராதில் கூறாததால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் எனக்கு பிரதிவாதி நண்பரா, உறவினரா குடும்ப நண்பரா, எந்த அடிப்படையில் ரூ.10 லட்சம் கொடுக்கும் அளவுக்கு தெரிந்தவரா என்று பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். திண்டுக்கல் நகர், மெங்கிள்ஸ் ரோடு, எம்எஸ்பி காம்ப்ளக்ஸ் மகதவு எண்.50/16 ல் பதிவு பெற்ற குளோபல் மல்டி லெவல் மார்க்கெட்டிங் ஆரம்பிக்கப்பட்டது என்றும் மேற்படி மார்க்கெட்டிங்கில் நானும் பிரதிவாதியும் ஒன்றாக வேலை பார்த்தோம் என்றும், குளோபல் மல்டி லெவல் மார்க்கெட்டிங்

நிறுவனம் வீடு அலுவலகங்களை சுத்தப்படுத்தும் பொருட்களை வியாபாரம் செய்து வந்தது என்றும், மேற்படி மார்கெட்டிங்கில் பொருட்களை வாங்காமல் பணம் மட்டும் செலுத்தினால் பணம் திரும்பப் பெறுவதாக இருந்தால் ரூ.100 க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2 வட்டி வீதம் சேர்த்துக் கொடுப்பதாகச் சொல்லி ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் என்றும், மேற்படி குளோபல் மல்டி லெவல் மார்க்கெட்டிங்கின் தலைமை செயல் அலுவலர் சந்திரசேகர் எனது நெருங்கிய நண்பர் என்றும், மேற்படி சந்திரசேகர் என்னிடம் குளோபல் மல்டி லெவல் மார்க்கெட்டிங் நிறுவன வளர்ச்சிக்கு ரூ.8 லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றும், எனது நண்பர் சந்திரசேகர் என்னிடம் வாங்கிய பணம் ரூ.8 லட்சம் மற்றும் பொதுமக்கள் டெபாசிட் தொகை சேர்த்து எடுத்துக்கொண்டு ஊரை விட்டு ஓடிவிட்டார் என்றும் நான் சந்திரசேகர் கொடுத்த கடன் பணத்திற்கு எந்த வகையிலும் சம்மந்தம் இல்லாத பிரதிவாதிக்கு சொத்துக்கள் உள்ளது என்ற காரணத்தினால் நானும் எனது நண்பர் பிரம்ம புத்திரனும் சேர்ந்து பிரதிவாதியை அடித்து மிரட்டி 9.9.2018 ம் தேதி வெற்றுப்புரோநோட்டு மற்றும் காசோலைகளில் கையெழுத்து வாங்கினோம் என்றும், அது சம்மந்தமாக பிரதிவாதி சாணார்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 27.9.2018 ம் தேதி ரசீது பெற்றுள்ளார் என்றும், பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் சாணார்பட்டி போலீசார் என்னை விசாரணைக்கு அழைத்தபோது நான் ஆஜராக மறுத்துவிட்டதாகவும் என் நண்பர் பிரம்மபுத்திரன் மட்டும் ஆஜராகி ரூ.8 லட்சம் சம்மந்தமாக பிரதிவாதியை தொந்தரவு செய்யமாட்டோம் என்று சென்றுவிட்டதாகவும் இவைகள்தான் நடந்த உண்மைகள் என்றும் மேற்படி விசயங்களை மறைத்து வழக்கிற்காக எதுவும் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1.5.2017 ம் தேதி பிரதிவாதி ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக எவ்வித புரோநோட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டு எழுதிக்கொடுக்காத நிலையில் புரோநோட்டில் கண்ட வட்டி தொகையை செலுத்த ஒப்புக்கொண்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா புரோநோட்டில் யார்

யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றும் யார் எழுதியது என்ற விவரம் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. சந்திரசேகரனுக்கு கொடுத்த கடன் தொகையை பிரதிவாதியிடமிருந்து பெறவேண்டும் என்பதற்காக பிரதிவாதியை அடித்து மிரட்டி நானும் எனது நண்பர் பிரமபுத்தினும் பெற்ற வெற்று புரோநோட்டினை பயன்படுத்தி அதை நிரப்பி தாவா தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் கண்ட தொகையை பிரதிவாதி திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd. M.K.Jamuna,
Prl.Sessions Judge,
Dindigul